# தமிழர் கல்விப் மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

# 2017 - 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:..........................................................

நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தேரா மன்னனைக் கண்டு முறை கேட்பேன் எனச் சூளுரைத்தவர்

அ) மாதவி ☐ ஆ) தேவந்தி ☐

இ) கண்ணகி ☐ ஈ) ஐயை ☐

2. "செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்தொழுக...." வந்த காலம்

அ) முதுவேனிற் காலம் ☐ ஆ) கார்காலம் ☐

இ) இளவேனிற்காலம் ☐ ஈ) பனிகாலம் ☐

3. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்

அ) வேர் ☐ ஆ) கடற்கரை ☐

இ) நடித்தல் ☐ ஈ) நீலம் ☐

4. மாதவி ஆடிய கூத்துகளின் எண்ணிக்கை

அ) 11 ☐ ஆ) 8 ☐

இ) 12 ☐ ஈ) 17 ☐

5. நூல் நிலையங்கள் உலகெங்கும் தோற்றம் பெற்ற நூற்றாண்டு

அ) 20 ☐ ஆ) 15 ☐

இ) 19 ☐ ஈ) 21 ☐

6. வானைமுட்டும் வளமனைகள் என்பது

அ) உவமையணி ☐ ஆ) உருவகஅணி ☐

இ) தற்குறிப்பேற்ற அணி ☐ ஈ) உயர்வுநவிற்சியணி ☐

7. கோட்டையைச் சுற்றி அரணுக்காக அகழப்பட்ட நீர் நிலை

அ) வாய்க்கால் ☐ ஆ) அகழி ☐

இ) கேணி ☐ ஈ) ஆழி ☐

8. தனது பன்னிரண்டாவது அகவையில் நாட்டிய அரங்கேற்றம் செய்தவள்

அ) ஐயை ☐ ஆ) மாதரி ☐

இ) கண்ணகி ☐ ஈ) மாதவி ☐

9. மூன்றாம் வேற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஆல் ☐ ஆ) இல் ☐

இ) அது ☐ ஈ) கு ☐

10. 'மானிடா சொல்' என்ற கவிதையை எழுதியவர்

அ) இரவி ☐ ஆ) அம்பி ☐

இ) உதயை வீரையன் ☐ ஈ) சாலை இளந்திரையன் ☐

11. 'நெஞ்சையள்ளும் மணியாரம்' எனப் புகழப்படுவது

அ) மணிமேகலை ☐ ஆ) குண்டலகேசி ☐

இ) சீவகசிந்தாமணி ☐ ஈ) சிலப்பதிகாரம் ☐

12. எதிர்மறைவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) சென்றான் ☐ ஆ) சென்றிலன் ☐

இ) சென்று ☐ ஈ) செல்லுதல் ☐

13. நூலகக் கட்டடத்திற்கான வரைபடத்தை வடிவமைத்தவர்

அ) எசு. ஆர். இரங்கநாதன் ☐ ஆ) க.மு. செல்லப்பா ☐

இ) கே. நரசிம்மன் ☐ ஈ) ஐசாக் தம்பையா ☐

14. "நீ கற்பின் கொழுந்து உலகப்பேரொளி" எனக் கோவலன் கூறியது

அ) மாதவியை ☐ ஆ) கண்ணகியை ☐

இ) பாண்டிமாதேவியை ☐ ஈ) மாதரியை ☐

15. த் என்ற மெய்யெழுத்தின் இன எழுத்து

அ) ங் ☐ ஆ) ஞ் ☐

இ) ந் ☐ ஈ) ன் ☐

16. 'எரிமலைகளை எட்டி உதைப்போம் எண்ணங்களைக் கொட்டி விதைப்போம்' என்ற கவிதையின் தலைப்பு

அ) ஓங்குபுகழ் கற்கள் ☐ ஆ) ஓடிடும் தமிழா ☐

இ) இனியும் ☐ ஈ) மானிடா சொல் ☐

17. க.மு.செல்லப்பா அவர்கள் தனது இல்லத்தில் நூல் நிலையம் ஒன்றைத் தொடங்கிய ஆண்டு

அ) 1981 இல் ☐ ஆ) 1954 இல் ☐

இ) 1959 இல் ☐ ஈ) 1933 இல் ☐

18. கற்றூண் என்பதைப் பிரித்து எழுதினால்

அ) கல் + தூண் ☐ ஆ) கற் + றூண் ☐

இ) கற் + தூண் ☐ ஈ) கற்த் + தூண் ☐

19. பாங்கியர் என்பது

அ) பெற்றோர் ☐ ஆ) ஆடவர் ☐

இ) புலவர் ☐ ஈ) தோழியர் ☐

20. 'புத்தரின் படுகொலை' என்ற கவிதையை எழுதியவர்

அ) எம். ஏ. நுஃமான் ☐ ஆ) ஏ.ஐ. குணதிலக ☐

இ) ஐசாக் தம்பையா ☐ ஈ) கே.நரசிம்மன் ☐

21. பொதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பொன்முடி ☐ ஆ) அறம் செய்ய விரும்பு ☐

இ) படித்தான் ☐ ஈ ) தங்கை ☐

22. தமிழர் மிகவுயர்ந்த கல்லாகப் போற்றுவது

அ) சாமிக்கல் ☐ ஆ) படிக்கல் ☐

இ) நடுகல் ☐ ஈ ) வைரக்கல் ☐

23. கயவாகு மன்னன் கண்ணகிக்கு கோயில் கட்டிய நாடு

அ) மலேசியா ☐ ஆ) இந்தியா ☐

இ) நாவலந்தீவு ☐ ஈ ) இலங்கை ☐

24. விளைபயிர் என்பது

அ) பண்புத்தொகை ☐ ஆ) வினைத்தொகை ☐

இ) உவமைத்தொகை ☐ ஈ) உம்மைத்தொகை ☐

25. கண்ணகி கணவனை இழந்தது

அ) பூம்புகாரில் ☐ ஆ) சோழநாட்டில் ☐

இ) பாண்டிய நாட்டில் ☐ ஈ ) சேரநாட்டில் ☐

26. குடிப்பது கூழ் கொப்பளிப்பது

அ) தேநீர் ☐ ஆ) தண்ணீர் ☐

இ) பன்னீர் ☐ ஈ ) இளநீர் ☐

27. வெற்றிலை நட்டான் என்பது

அ) காலவாகுபெயர் ☐ ஆ) பொருளாகுபெயர் ☐

இ) குணவாகுபெயர் ☐ ஈ ) சினையாகுபெயர் ☐

28. ஆத்தொழில் செய்வோர்

அ) பாணர் ☐ ஆ) குயவர் ☐

இ) ஆயர் ☐ ஈ ) வேடர் ☐

29. வேற்றுமைகள்

அ) இரண்டு ☐ ஆ) நான்கு ☐

இ) ஆறு ☐ ஈ ) எட்டு ☐

30. கண்ணகி பிறந்த நாடு

அ) பாண்டியநாடு ☐ ஆ) சோழநாடு ☐

இ) சேரநாடு ☐ ஈ ) ஈழநாடு ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தொல்காப்பியம் தமிழரின் இலக்கண நூலாக மட்டுமன்றித் தமிழர்களின் வரலாற்று நூலாகவும் திகழ்கின்றது. உலக இலக்கண நூல்களுள் எந்த இலக்கண நூலும் தொல்காப்பியம் போல் பகுத்தும் தொகுத்தும் விரித்தும் கூறவில்லை என்பது மொழியியலாளரின் கருத்தாகும். உலகில் எகிப்து, பாரசீகம், கிரேக்கம் ஆகிய நாடுகளே நாகரிகத்தில் பழமை மிக்கவை எனக் கருதப்பட்டன. அங்கு தமிழரின் நாகரிகம் பரவி உள்ளது என்பதைத் தொல்காப்பியம் நிறுவி நிற்கின்றது. அதாவது, தொல்காப்பியரால் அளவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட நாழி என்ற சொல் எகிப்தில் புதைபொருள் ஆய்வில் கிடைத்த பானையில் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் தொல்காப்பியர் பயன்படுத்திய சாத்தன் என்ற சொல்லும் எகிப்தில் கண்டறியப்பட்டுள்ளது. உரோமானியர்களுடனும் எகிப்தியர்களுடனும் செங்கடல் வழியாகத் தமிழர்கள் மேற்கொண்ட வணிகத் தொடர்பே, தமிழ் நாகரிகம் எகிப்தில் கண்டறியப்பட்டதற்குக் கரணியமாகும். தமிழரின் உயர்ந்த வாழ்வியலும் உலகத்தாரோடு கடல் கடந்து வைத்திருந்த வாணிப உறவும் தமிழர் வரலாற்றில் மறைக்கப்பட்டாலும் எழுத மறந்திருந்தாலும் புதைபொருள் ஆய்வுகள் உலகத்தைத் தமிழர் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளன.

1. தமிழர் வரலாற்றில் மறைக்கப்பட்டவை எவை?

2. மொழியியலாளர் தொல்காப்பியம் பற்றிக் கொண்டிருந்த கருத்து யாது?

3. எகிப்தில் கண்டறியப்பட்டுள்ள சாத்தன் என்ற சொல்லைப் பயன்படுத்தியவர் யார்?

4. அளவைக் குறிப்பதற்குத் தொல்காப்பியர் பயன்படுத்திய சொல் எது?

5. தொல்காப்பியம் எத்தகைய நூலாகத் திகழ்கின்றது?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தமிழகம் என்ற பெருநிலம் முழுவதும் வணிகம் செய்த நிலவணிகன் யார்?

______________________________

2. செங்குட்டுவன், கயவாகு, இளங்கோவடிகள் மூவரும் கண்ணகி வாழ்வில் எவ்வகையில் இடம் பெறுகின்றனர்?

______________________________

______________________________

3. யாழ் நூலகம் எரிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை?

______________________________

______________________________

4. 'பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்' என்ற பழமொழி விளக்குவது யாது?

______________________________

5. கண்ணகி உடைத்த சிலம்பில் இருந்து தெறித்த மாணிக்கக் கற்களைக் கண்டு மன்னன் ஏன் பதறினான்?

______________________________


______________________________

6. தாய்மொழியை ஒருவர் கைவிட்டால் அதனால் என்ன விளையும் என்று அம்பி கூறுகின்றார்?

______________________________

______________________________

7. தமிழீழ வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ. ______________

ஆ. ______________

இ. ______________

ஈ. ______________

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல், படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக.**
**அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

அ.




ஆ. நல்ல கொள்கையினைப் படைப்போம் - இந்த
நானிலத் துயரமதைத் துடைப்போம்

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

   அ. விறுவிறு :- ____________________

   ஆ. பென்னம்பெரிய :- ____________________

2. சொற்பொருள் தருக.

   பூவனம் :- ____________ ஏவலர் :- ____________

   ஆயர் :- ____________ மூதூர் :- ____________

   மாற்றான் :- ____________ மிடறு :- ____________

3. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   பண்புத்தொகை :- ____________________

   உம்மைத்தொகை :- ____________________

   வேற்றுமைத்தொகை :- ____________________

4. பின்வரும் சொல்லியங்களிலுள்ள மரபுச் சொற்களை இனங்கண்டு அவற்றின் வகைகளை எழுதுக.

   1. நெல்வயல்கள் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தன.

      ____________________

   2. வளவனை யானை துரத்தியதால் திக்குத்திசை தெரியாமல் ஓடினான்.

      ____________________

   3. ஊரும்பேரும் போற்ற நாம் வாழவேண்டும்.

      ____________________

5. **அழைக்கப்பட்டன** என்ற வினைச் சொல்லின் எண், இடம், காலம் என்பவற்றைத் தருக.

எண் :- ______________________

இடம் :- ______________________

காலம் :- ______________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

கலைஞர்களின் படைப்புகளான நாடகமோ நாட்டியமோ கதையோ சிறுகதையோ திரைப்படமோ எதுவாக இருந்தாலும் அவை மக்களின் திறனாய்வுகளுக்குள்ளாகின்றன (விமர்சனம்). இவற்றை யாராலும் தடுக்க முடியாது. திறனாயும் உரிமை எல்லோருக்கும் உண்டு. ஒரு கலைப் படைப்பைப் பற்றிய திறனாய்வில் குறையும் இருக்கலாம் நிறைவும் இருக்கலாம். வெறும் குறைகள் மட்டுமோ, அல்லது நிறைகள் மட்டுமோ தரமான திறனாய்வுகள் ஆகாது. திறனாய்வுகள் படைப்பாளிகளின் மனங்களைப் புண்படுத்தக் கூடாது. மாறாகக் கலைஞர்களாகிய படைப்பாளிகளைத் தூண்டக் கூடியனவாக அமைதல் வேண்டும். கலைஞர்களும் தரமான படைப்புகளையே கொடுக்க வேண்டும். தங்களால் எது முடியுமோ எந்தளவு முடியுமோ அதனைத்தான் செய்யவேண்டும். எல்லோரும் எழுதுகின்றார்களே நானும் எழுதினால் என்ன என்று நினைத்து ஏனோ தானோ என்று எழுதக் கூடாது. தரமான படைப்புகளைத் தரும் ஒரு கலைஞன் இறைவனுக்கு நிகரானவன். அதே வேளை திறனாய்வுகளும் தரமுள்ளவையாக அமைதல் வேண்டும். ஒருவருடைய படைப்புகள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு உட்படக் கூடாது. கலைஞர்களை வளர்ப்பது தரமான திறனாய்வுகளே.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்நூலகம்
- சூழல் மாசடைதலும் அவற்றைத் தடுக்கும் வழிகளும்.
- புலம்பெயர் நாட்டில் தமிழர் பண்பாடும் இளையோரும்.

புள்ளிகள் 20